Thailamuraikal

அகஸ்தியர் அருளிச்செய்த

# தைல முறைகள் - II



B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
கெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு,
விலை] சென்னை—1. [பை. [redacted]—00

AM

A siddhadreams ebook

LIBRARY

DOCUMENTATION CENTRE

CENTRAL COUNCIL FOR RESEARCH IN INDIAN MEDICINE AND HOMOEOPATHY
NEW DELHI

Class No. S 614

Book No. ARM G6T

Accession No. 628

உ

கடவுள் துணை

அகஸ்திய மஹாமுனிவர் அருளிச்செய்த

வைத்திய

# தைல முறைகள் - II

இஃது

திருவெண்காடு

ஆறுமுக சுவாமிகளால்

பார்வையிடப்பட்டது.

---

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

இதன் விலை] [அணா1.00

A siddhadreams ebook

5614
HKM
G61

LIBRARY
Accn. No. 8648
3-1-8?

உ

கடவுள் துணை

அகஸ்திய மஹாமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய

# வைத்திய

# தைல முறைகள் - II

பாயிரம் - காப்பு

மாமேவுகௌரிமனோன் மணியாள்செய்ய
மலர்பாதத்தினைத் துதித்து வையமீது
தேமேவுவயித்தியத்தின் றயிலப்பாங்கைச்
செந்தமிழாற்சொல்வதற்குச் சீர்மிகுந்த
காமேவுமூஷிகமீ தேறியன்பர்
கடிமிலுதாங்கயமுகவர் கமலமென்னும்
பாமேவுமுடையதிருப் பதத்துதித்துப்
பாங்குடனேகாப்பாகப் பன்னினேனே 1

பன்னியமா வயித்தியத்தின் றயிலப்பாங்கைப்
பண்டிதர்களனுஷ்டித்த மூலிகைதான்
தன்னயமாய்த்தேடியுடன் செய்தேவித்த
தானிலத்திலுள்ளோர்கள் வியாதிதீர
உன்னியகாலையிற்றருகத் தாயின்பாதம்
உளங்கருதிதாதாக்க ளடியைப்போற்றிச்
சொன்னயங்களமைத்தகண பதியின்பாதத்
துதிப்பவர்க்குப்பலநோயுந் தொலை[illegible]மீரே. 2

சீர்மிகுந்தசிவபிரா னடியைப்போற்றி
செய்யமயிலேறிவரு[illegible] குகன[illegible]ட்போற்றி
தார்மிகுந்த திரு[illegible]தான்போற்றி
சத்திசிவகாமி[illegible]மிதாள்போற்றி
பேர்மிகுந்தகலைமகளின் சரணம்போற்றி
பேசரியபெரியோர்கள் பதமும்போற்றி
ஏர்மிகுந்ததமி[illegible]த்தின் வயித்தியக்கூறை
யிப்புவியிற்செந்தமிழா லிசைத்திட்டேனே. 3

பாயிரம் முற்றிற்று.

A siddhadreams ebook

## நூல்

### மேகத்திற்குத் தைலம்

நிகரில்லாமேகத்தின் தயிலங்கேளு
நிலையானசந்தனமு மிலாமிச்சோடு
மகிழ்வான ஆவாரையின் பட்டைதானும்
வகைபத்துப்பலமாக வாங்கியேதான்
பிகலாமற் 1 றூணிநீர் விட்டொன்றாய்ப்
பெருமையுற்றகிஷாயத்தை வாங்கிக்கொண்டு
நகையாமல் நல்லெண்ணெய் நாழிவிட்டு
நன்னாரிவேர்பலந்தா னரைத்துப்போடே. 1

போட்டதனைக்காய்ச்சிமெழு குற்றதானால்
புகட்டியவேடிந்திடுவாய் பூசக்கேளு
நாட்டிதனைமுழுகிவர மேகந்தீரும்
நலமானதேகமது 2 யிருகும்பாரு
பூட்டதனைமேகநீர் போகவேண்டிப்
புனிதமாய்மருந்தொன்று புகலக்கேளு
சாட்டதனைமுன்புசொன்ன பற்பங்கொண்டு
சார்ந்துநீகொதித்திடவே சாந்தமாமே. 2

### வில்வாதித் தைலம்

சாந்தமாம்வில்வாதித் தயிலங்கேளு
தாரணியில்வில்வவேர் பலந்தான்பத்து
பாந்தமாயிடித்ததனைப் 3 பதக்குநீரிற்
பருவமாய்க்காய்ச்சியே யெட்டொன்றாக்கிப்
போந்தவெண்ணெய் நாழிவிட்டுச் சந்தனம்பலந்தான்
புகழானகிஷாயத்தி லரைத்துப்போடு
வாய்ந்தமெழுகானால் வடித்துக்கொண்டு
வாகாகமுழுகிவர வரிசைகேளே. 3

1 தூணி - பத்தரை, அல்லது முப்பத்திரண்டுபடி.
2 இறுகல் - பலப்படுத்தல்.
3 பதக்கென்பது - இரண்டுபடி.



வரிசையாய்முழுகிவரப் பித்தம்போகும்
மைந்தனேகபாலத்தில் வெட்டைபோகும்
இருமைபெறஆக்கிவைக்க மேகம்போகு
மிருகண்ணுந்தெளிவுண்டா மிருமல்போகும்
உரிசைபெறப்பித்தமெல்லா மோடிப்போகும்
உள்ளயர்ச்சியுட்சுரங்க ளொழிந்துபோகும்
தரைமீதிற்றளும்பிறக்குஞ் சூட்சஞ்சொன்னேன்
சம்பிரதாயமுமிதுதான் றரணியோர்க்கே. 4

### வேங்கைத் தயிலம்

தரணியுள்ளமானிடர்கள் பிழைக்கவேண்டிச்
சாற்றுகிறேன்வேங்கையிட தயிலந்தன்னைக்
கரணியாம்வேங்கைபலம் பத்துவாங்கிக்
காய்ச்சிவிடுதூணிநீ 1 ரெட்டொன்றாக்கித்
திரணியுள்ளகிஷாயத்தை வடித்துக்கொண்டு
திறமாகஎலுமிச்சம் பலமொன்றாக
அரணியாங்கிஷாயத்திற் குழப்பிமைபோ
லழகானமெழுகுபத மானவாறே. 5

### பாக முழுகிவர

ஆனவைகேள்வாதமொடு சூலைபோகும்
அடர்ந்திட்டபித்தமது மாண்டுபோகும்
பீனிசங்கள்மண்டையிடி பிறட்டல்சீதம்
பெலமானவீக்கமுதல் வாங்கிப்போகும்
மேனியெல்லாங்காந்தியுண்டாம் விஷரோகம்போம்
வெகுவாகமுன்சொன்ன தயிலப்போக்கு
பூனிதமாய்ச்சொல்லிவிட்டேன் தெளிவாய்ப்பாரீர்
புகழானபற்பத்தின்போக்கு றாறே. 6

### வெட்டிவேர்த் தயிலம்

போக்கான தயிலமொன்று சொல்லக்கேளு
புதிதானவெட்டிவேர் பலந்தான்பத்து

1 எண்டொன்றென்றது - எட்டி லொருபங்கு

siddhadreams ebook

நோக்காகவிடித்ததனைப் பதக்குநீரில்
நாலுக்கமாய்க்காய்ச்சியே யெட்டொன்றாக்கி
வாக்காகவடித்ததனிலெண் ணெய்நாழி
வளமையாயதிமதுரம் பலந்தானென்று
தாக்காகஎண்ணெக்கு ளரைத்துக்கொண்டு
சாந்தமாய்மெழுகுபதந் தன்னில்வாங்கே.

வாங்கியேமுழுகிவர வரிசைகேளு
மாநிலத்திற்பீனிசங்கள் மண்டைசூலை
யோங்கியேகுட்டமொடு பீநீர்க்கோவை
யொளிமருவுங்கண்புகைச்சல் காதுமந்தம்
வாங்கியேயொப்பீளைப்பு கைகாலோய்வு
வறிவுகெட்ட தாதுசமு மிருமல்காந்தி
நீங்கியேபோவதற்கு மண்டலந்தான்
நேராகவொன்றைவிட்டு வொருநாளென்னே.

## வேம்பின் தைலம்

என்னவின்னமொருதயிலஞ் சொல்வேன்கேளா
யெளிதாகவேம்பினிட பட்டைவாங்கி
உன்னவேகால்துலா மிடித்துக்கொண்டே
வொருதூணிநீர்விட் டொன்றாய்க்காய்த்தாற்
சொன்னபடியெட்டொன்றாய் வடித்துவாங்கிச்
சுருதிபோலெண்ணெயிரு நாழிவிட்டு
தன்னயமாயேலக்காய் பலமிரண்டு
தலமானகிஷாயத்தி லரைத்துப்போடே.

அரைத்துடனேகாய்ச்சியது மெழுகதானால்
ஆற்றியேவடித்துவைத்து முழுகும்போது
நிரைத்திட்டவாதமெல்லா மெங்கேபோச்சு
நிசமானசூலையொடு குட்டரோகம்
திரைத்திட்டகழுதனையு மேற்கொடுப்புச்
செங்கரப்பன்புண்புரைகள் சேராதோடு
முரைத்திட்டதயிலத்தி னூறதிமெத்த
வுத்தமனே தயிலமொன் றாவுரைக்கின்றேனே. 1



## குறுந்தொட்டிவேர்த் தயிலம்

உரைக்கிறேன் 1 குறுந்தொட்டி வேர்பலங்கே
ளுத்தமனேயொருதுலாம் நிறுத்துப்போடு
நிரைக்கிறேன் தூணிநீ ரெட்டொன்றாக்கி
நேரானஎண்ணெயிரு நாழிவிட்டுக்
கரைக்கிறேன்கிஷாயத்தி லரைத்துமைபோற்
கசகசா இருபலந்தான் கண்டுகொள்ளு
நரைக்கிறேனெனக்கென்ன வாதமெல்லாம்
நடுநடுங்கியோடுமடா' நயந்துபாரே. 11

## கொடுவேலித் தயிலம்

நயமான 2 கொடுவேலி பலந்தான்பத்து
நன்றாகவிடித்ததனைப் பதக்குநீரில்
வயமாகக்காய்ந்துலர்த்தி யெட்டொன்றானால்
வண்மையுடனல்லெண்ணெய் நாழிவிட்டு
நியமானபுன்னைக்காய் விதை 3 மாவெண்
ணெய்யுடனேசீரகமோர் பலந்தானிட்டு
சியமாகஅரைத்ததனைப் பாகிற்சேர்த்து
சீரானமெழுகுபத மானவாறே. 12

ஆனதயிலம்வடித்தே முழுகும்போது
ஆனந்தவாய்வினுட னந்தரமாம்வாய்வு
தேனமருங்குழலாள்கேள் வாதமெல்லாஞ்
சிறுசொரியுஞ்சிரங்குகுஷ்டம் தினவும்போகும்
போனதொருஅரையாப்புக் கிரந்திசூலை
புண்புரைகள்பிளவுமுதற் பொடிப்புவீக்கம்
நானென்னவத்தநோ யனைத்தும்தீரும்
நல்லதொருதயிலமது நாடிப்பாரே. 13

1 குறுந்தொட்டிவேர் - சிறுகாஞ்சொறி.
2 கொடிவேலி - சித்திரமூலம் வேர்.
1 ஆவெண்ணெய் - பசுவெண்ணெய்.

A siddhadreams ebook

### சீரகத் தயிலம்

பாரப்பாசீரகமும் பலமிரண்டு
பதமாகவிடித்துநீர் பதக்கிற்போட்டு
சீரப்பாஎட்டொன்றாய்க் கியாழம்வாங்கித்
தெளிவான நல்லெண்ணெய் படிதான்சேரு
காரப்பா 1 கார்போகி பலந்தானென்று
கஷாயத்திலரைத்ததனைக் கலக்கிக்கொண்டு
எரப்பாமெழுகுபத மாகவாங்கி
யியல்பாகமுழுகிவரக் குணத்தைக்கேளு. 14

குணமென்னசுரமெட்டு வாய்வுபத்து
குட்டமொடு 2 தமுதனையுங் குண்டலமுங்கேளு
மணமென்னவாத்திபித்தங் கிறுகிறுப்பு
வாயினூறவத்ததொரு சோகைபாண்டு
கணமென்னகண்குளிர்ச்சி உஷ்ணரோகம்
கபாலத்திற்சூடான கபநீர்க்கட்டு
பணமென்னநோய்தீர மருந்துமுண்டோ
பாதுலகின்முளைத்த மூலிகையிற்பாரே. 15

மூலிகையில்வெகுமூலி சஞ்சீவியாக
முளைத்ததேமலைதோறுங் காடுதோறும்
சாலிகைக்குவெகுமூலி நாட்டுக்குள்ளே
சாதகத்தையறியார்கள் சண்டிமாண்பர்
ஆலிகைக்குள்வயித்தியன்றான் குணத்தைக்காணான்
ஆண்மையினல்வயிற்பிழைக் கவலைவான்மட்டை
கோலிகைக்குள்மனதுவைக்க வேண்டாம்சொன்னேன்
குறைவானவிருநூற்றின் மறையைப்பாரே. 16

### சூரித் தயிலம்

நூற்றிலேயின்னமொரு தயிலங்கேளு
துணுக்கமுடன் 3 சூரியது இலாமுங்கால்தான்

1 கார்போகி - கார்போகிஅரிசி.
2 தமுதனை - மேகத்தடிப்பு. 3 சூரி - எருக்கு.



1 ஊற்றுவெனீர்பதக்கி லிடித்துப்போடு
வொருவிறகாற்காய்த்துலர்த்தி யெட்டொன்றானல்
ஆற்றியேவடித்துடனே யெண்ணெய்நாழி
யதில்விட்டுக்காக்க வகைசாற்றக்கேளு
சோற்றிலேயருபிரண்டைக் காயும்நாழி
சுக்கதிலேபலமொன்று மரைத்துச்சுட்டே. 17

சுட்டியேமெழுகுபத மாகவாங்கித்
தோணவேமூழ்கிவர மண்டலந்தான்
ஓட்டிவிடுங்கிராந்திகுட்டஞ் சூலைகுன்மம்
உண்டுவிடக்கிராணியெல்லா மூன்மூலத்தை
மாட்டியேதீர்களெல்லாம் வாங்கிப்போகும்
வாங்காதபீனிசமு மண்டசூலை
தாட்டிகமாய்த்துரத்திவிடுந் தயிலப்போக்குஞ்
சஞ்சீவிபோலவுந்தான் சாற்றினேனே. 19

### கீழ்க்காய் நெல்லித் தயிலம்

சாற்றவின்னம்வகைகேளு கீழ்க்காய்நெல்லி
சமூலமாய்க்காற்றுலா மிடித்துப்போடு
ஆற்றுநீர் தூணிவிட்டுக் கியாழஞ்செய்து
அப்பனேயெட்டொன்றாய் வடித்துவாங்கி
வார்த்திடுவாயெண்ணெய் படிதானிரண்டு
வாகானசர்க்கரையின் பலந்தானென்று
ஏற்றியேவடித்துவிடு மெழுகதாக
இயலுடனேமுழுகிவரத் தீரும்நோய்கேள். 19

கேளப்பாபித்தமென்ற தெல்லாம்போகும்
கிறுகிறுப்புதலைசுழற்றல் வாந்திதீரும்
நாளப்பாரத்த மெரிச்சலோடு
நலமானஎய்ப்புளைப்பு பித்தரோகஞ்
சுளப்பாமஞ்சளைப்போல் நீர்கருக்குஞ்
சுற்றலுடனுஷ்ணங்கள் சூடலெல்லாம்

1 ஊற்றுவெனீர் - சரப்புசபலம்.

A siddhadreams ebook

வேளப்பாமேலெரிவு கைகால்காந்தல்
வெளுத்தசடங்கறுப்பாக்கும் விந்தைப்பாரே. 20

### சங்கம்வேர்த் தயிலம்

விதமானசங்கம்வேர்த் தயிலங்கேளு
வெட்டிவந்தகாற்றுலர இடித்துப்போட்டு
பதமான தூணிசல மெட்டொன்றாக்கி
பகருமெண்ணெயிரண்டுபடி பண்பாய்விட்டு
அதமானமிளகுபல மரைத்துப்போட்டு
அப்பனேமெழுகுபத மானவாறே
சுதமாகவடித்ததனை முழுகும்போது
சொல்வதென்னகுட்டமொடு சொறிசிரங்கே. 21

சிரங்குடனேகிராந்தியொடு சூலைரோகஞ்
செங்கருப்பான்வண்டுகடி சிலவிஷங்கள்
குருபோலவழங்குகின்ற சயங்களோடு
குத்திருமல்வாதசயன் கூடியோடும்
வரங்கொடுக்குஞ்சங்கரர்சொல் வார்த்தைகேட்டு
மகமாயிசொல்லக்கேட்டு வழுத்தினேன்யா
னரங்கமுடனின்னமொரு தயிலங்கேளு
அமுக்குராவேர்பலந்தான் பத்துவாங்கே 22

### அமுக்குராவேர் தைலம்

வாங்கியேபிடித்ததனைப் பதக்குநீரில்
வடித்தெண்ணெய்பலமொன்று வதனிற்சேர்த்து
ஓங்கியதோரெலுமிச்சம் பழச்சார்நாழி
யொக்கவிட்டுமெழுகுபத முருட்டிப்பார்த்து
தூங்கவேவடித்ததனை வைத்துக்கொண்டு
சுகமாகமுழுகிவரச் சுகத்தைக்கேளு
பாங்கியேபீனிசங்கள் தவிர்ந்துபோகும்
பாரிலுள்ளமண்டையிடி பறந்துபோமே. 23



### இஞ்சித் தைலம்

பறப்பதற்குயின்னமொரு தைலங்கேளு
பச்சையிஞ்சிகால் துலாம் பரிந்திடித்து
சிறப்புடனேபிழிந்துவடி கொண்டுநன்றாய்த்
தெளிவானநல்லெண்ணெய் படிதான்விட்டு
உறப்புடனே ஆவின்பால் படிதான்சேர்த்து
வுறுதியாய்மெழுகுபத மாகவாங்கி
நிறப்புடனேமுழுகிவரப் பருவமாகி
நிசமாகத்திருநோய் நிகழ்த்தினேனே. 24

நிகழ்த்துகிறேன்மண்டையிடி சூலைவாதம்
நிலைகொண்டபீனிசங்க ளிரைப்பிளைப்பு
புகழ்த்துகிறேன்சூலையொடு வாதவாய்வு
பொல்லாதகால்கடுப்பு மேல்நோயெல்லாம்
அகலுமேகுட்டமென்ப தற்றுப்போகும்
அசதியிருமலுமுடனே தெஞ்சின்கத்ரி
செகமதனில்நாடாம லோடிப்போகுஞ்
செம்முள்ளியெண்ணெய்தனைச் செப்புறேனே. 25

### செம்முள்ளித் தைலம்

செப்புகிறேன்செம்முள்ளி பலம்நூறப்பா
சிறப்பாக 1 மூலத்தோடிடித்துப்போட்டு
ஒப்புகிறேன் தூணிநீ ரதிலேவிட்டு
வுருக்கவேயிடையொன்று புகத்துகாய்ச்சி
அப்புகிறேனதைவடித்து யெண்ணெய்நாழி
யதில்விட்டுமெழுகுபத மாகவாங்கி
நப்புகிறேன்முழுகிவருங் காலந்தன்னில்
நன்றாகத்திருநோய் நவிலக்கேளே. 26

நவிலக்கேள்சயமீளை யிளைப்புரோகம்
நாடாதுமந்தார காசத்தோடுங்

---

1 மூலத்தோடு - செம்முள்ளி வேருடன்

A siddhadreams ebook

கவிலக்கேள்கசநோவு குன்மநோயுங்
கண்ணீரைப்பாச்சலுடன் விக்கல்தானும்
புவியில்வரும்புண்புரைக ளெல்லாந்தீரும்
பொருந்துமரையாப்புக்கிரந்தி யண்டவாதம்
திவியக்கேள்வீக்கமொடு விஷபாகந்தான்
தீங்குமடாயித்தயில முருக்கும்போதே. 27

சாரணைத் தைலம்

உருக்கவேயின்னமொரு தைலங்கேளு
வுறப்பான 1 சாரணையின் பலந்தான்பத்து
இருக்கவேயிடித்ததனைப் பதக்குநீர்விட்
டெட்டொன்றாய்க்காய்ச்சியபி னெண்ணெய்நாழி
மருக்கவேகொதித்ததனை வடித்துவாங்கி
மகத்தானமெழுகுபத மானவாறே
குருக்கவேவடித்ததனை முழுகும்போது
குடிபோகும்வாதமொடு வாய்வின்கூறே. 28

இருவேலி தைலம்

கூறுக 2 யிருவேலி பலந்தானாறு
கொத்தோடேநரித்திடித்துத் தூணிநீரில்
பேறுகவிட்டெரித்து யெட்டொன்றாக்கிப்
பிறகுயெண்ணெயதில் நாழிநீதான்சேர்த்து
வீறுகக்கொதித்துவற்றி மெழுகதானல்
மெய்யிலேபூசியதை முழுகும்போது
தேறுதசடலங்கள் தேறிப்போகும்
ஜெனித்தகிறுகிறுப்பும்போத் தெளிவாயாமே. 29

அகிற்கட்டை தைலம்

ஆய்ந்தவடற்கட்டைகளின் பலந்தான்கேளு
ஐம்பதுதான்வாங்கியதைத் தூளாய்ப்பண்ணி

---

1 சாரணை - சாரணத்தி யெனவுமுறவும்.
2 இருவேலி - வெட்டிவேர்.



வாய்ந்தஜலத்தூணிவிட் டெட்டொன்றாக்கி
வளமான நல்லெண்ணெ யதிலேநாழி
பாய்ந்திட்டுமெழுகுபத மானபோதிற்
பக்குவமாய்வடித்துநீ மூழ்குங்காலை
வேய்ந்த 1 நீர்தோஷமெல்லாந் தீரும்பாரு
மேகங்களகலுமின்னம் விளம்பக்கேளே. 30

அறுகம் வேர் தைலம்

விளம்பக்கேள றுகம்வேர் பலந்தானாறு
மெய்யுள்ளபச்சையெல்லாந் தள்ளிப்போட்டு
குளம்போலுரலில்வைத் திடித்துக்கொண்டு
2 கோதில்ஜலமொன்றுபடி யதிலேவார்த்து
குழம்பாகக்கரைத்ததனை யெட்டொன்றாக்கிக்
குணமாகவடித்தெண்ணெய் நாழிவிட்டு
பழம்போலேமெழுகுபத மானவாறில்
பதனமாய்வடித்ததனை முழுகுவாயே. 31

முழுகியேவரும்போது குணத்தைக்கேளு
3 மூலத்திற்சூடுடனே கபாலச்சூடு
தழுகியேபித்தமெல்லாந் தவறுண்டேபோம்
தப்பாதுகுன்மங்க ளெட்டுமோடும்
அழுகியேவருங்கிரந்தி சூலைநீர்கள்
ஆனதொருவயிற்றுவலி நெஞ்சிளைவு
கொழுகியதோர்நீர்க்கடுப்பு மேல்வரட்சை
கோலித்தவக்கினியுங் குளிர்ந்துபோமே. 32

கொடுப்பைத் தைலம்

குளிரவேவகையொன்று சொல்லக்கேளு
4 கொடுப்பைநீர்படிநாழி யெண்ணெய்நாழி
தளர்வானகோஷ்டத்திற் பலந்தானொன்று
தன்னுக்குட்பகவின்பால் விட்டேயாட்டி

---

1 நீர்தோஷம் - சரீரத்திற்கொண்ட ஜலதோஷம்.
2 தன்னீர் - நல்லநீர். 3 மூலம் - ஆசனக்கடுப்பு.
4 கொடுப்பை - பொன்னாங்காணி.

A siddhadreams ebook

யெளிதாகக்கரைத்துவிடு மெழுகுபோலே
யினிதாகவடித்தபின்பு மியல்புகேளு
நளினமாய்முழுகிவர மண்டலத்தில்
நலமாகத்தீருநோய் நவிலக்கேளே. 33

கேளப்பாபித்தமெல்லாங் கெடிகெட்டோடுங்
கிறுகிறுப்புமண்டையிடி செயதீர்த்தாகம்
மாளப்பாவுஷ்ணங்க ளுள்சுரங்கள்
வளருமென்றமேலெரிவு கைகால்காந்தல்
தேள்போன்றகண்ணெரிவு சிரசிற்குடு
தேகவலிபெரிகுன்மந் தீர்ந்துபின்னும்
வாள்போன்றகண்ணுக்குத் தெளிவுண்டாகு
மகத்தானதயிலமிது வணங்கிச்செய்யே. 34

### கையாந்தகரைத் தைலம்

செய்யவேயின்னமொரு தைலங்கேளு
செகத்திலுள்ள 1 கையான்சார் படிதானொன்று
வெய்யவேகற்குழஞ்சாற் படிதானொன்று
விளப்புகிறேனெல்லிக்காய் சார்படிதான்
உய்யவேபடியொன்று மூன்றுங்கேளு
வுருக்கவேயெள்ளெண்ணெய் படிதானொன்று
மெய்யானசாதிக்காய் பலந்தானொன்று
2 வியனுகவேயிடித்து அரைத்துப்போடே. 35

போட்டதனைமெழுகுபதந் தன்னில்வாங்கிப்
புகழாகவேவடித்து முழுகும்போது
தாஷ்டிகமாந்தலைநோவு கண்ணோவோடு
தளர்வானசெவிநோவு சார்ந்தபித்தம்
ஓட்டிவிடுமுஷ்ணங்கள் பீனிசங்கள்
ஒழிந்துவிடுமென்றுமுனி யுரைத்தவாறும்
நாட்டிலுள்ளதின்னமொரு தைலஞ்சொல்வே
னலமான 3 சவரிபலம் நாலுவாங்கே. 36

1 கையாந்தகரை - கரிசிலாங்கண்ணி.
2 வியனுக - சமூலக. 3 சவரி - குறட்டை.



### சவரித் தைலம்

பலம்நாலுதானிடித்துத் தூணிநீரில்
பக்குவமாய்ப்போட்டுவற்றி யெட்டொன்றாக்கிச்
ஜலமதனைவடிகொண்டு யெண்ணெய்நாழி
சாத்தமுடன்விட்டிரண்டுஞ் சேர்த்துக்கொண்டு
நலமானகருஞ்சீரகம் பலந்தானொன்று
நாட்டியேயரைத்ததனுட் கரைத்துக்காய்ச்சிப்
பெலமானமெழுகுபத மானவாறே
பித்தர்களேவடித்துரைந்து முழுகுவாயே. 37

வாயானவாதமெங்கே குட்டமெங்கே
வாதத்திலெழுந்த கரைப்பானெங்கே
காயானகாய்ப்பெங்கே கழலையெங்கே
கண்டத்தில்வீக்கமெங்கே வாதமெங்கே
தோயானநோயெல்லா மகன்றுபோகும்
1 நுணுக்கமாய்த்தைலமொன்று நவிலக்கேளு
சேயான 2 சென்னகரப் பட்டைதானுந்
தீவிரமாய்ப்பலம்நாலு தாக்கிடாயே. 38

### சென்னகரைபட்டை தைலம்

தாக்கியேயிடித்ததனைப் பதக்குநீரில்
சாதகமாய்ப்போட்டுலர்த்தி யதையெட்டொன்றாய்
ஆக்கியேயெள்ளெண்ணெய் படிதான்விட்டு
அதிற்பாதிவேப்பெண்ணெய் கூடச்சேரு
நோக்கியேவசம்புபல மரைத்துப்போடு
நுணுக்கமாய்மெழுகுபத மானபோதில்
தூக்கியேவடித்ததனை முழுகும்போது
தொலையாதவாதமெல்லாந் துலைந்துபோகும். 39

### இலுப்பைப்பட்டை தைலம்

போகவேயின்னமொரு தைலங்கேளு
புகழானவிலுப்பைப்பட்டை பலமோநாலு

1 நுணுக்கம் - சொற்பம், 2 சென்னகரைபட்டை - செக்கரைப்பட்டை.

A siddhadreams ebook

ஆகவேயிடித்ததனைத் துணிநீரில்
அன்புடனேபோட்டுடனே யெட்டொன்றாக்கி
வேகவேயெண்ணெய்படி பத்துவிட்டு
வேப்பெண்ணெயதிற்பாதி கூடச்சேரு
1 நாகவல்லிச்சாருடனே படிதான்சேரு
நன்றாகமெழுகுபத மானவாறே. 40

பதமாகமுழுகிவரத் தீரும்நோய்கள்
பன்னியகபாலச்சூடும் பறந்துபோகும்
இதமாகயின்னமொரு தைலங்கேளு
யிடித்திடுவாயிலுப்பைப்பட்டை பலந்தானது
இதமாகத்துணிநீ ரதனில்விட்டு [
யெட்டொன்றாய்க்காய்ந்தபின்பு வடித்துக்கொண்
சுதமானவெள்ளெண்ணெய் படிதான்விட்டு
சுந்தரமாமஞ்சத்துள் போட்டுக்கிண்டே. 41

கிண்டியேவடித்திடுவாய் மெழுகதானல்
கேடிலங்கியோடிவிடும் வாகமெல்லாம்
பண்டிதற்கிந்தமுறை பாடமுண்டோ
பார்ப்பதற்குவெகுசுருக்கம் பரித்துபாரு
கண்டிதமாய்ச்சொல்லிவிட்டேன் சுருக்குமெத்த
கதிகெட்டநோயெல்லாந் தீரவேநெய்
உண்டுகொண்டுஇருப்பதற்குச் சொர்னமுண்டே
யுறுதியித்தநூல்முறையை யுன்னிப்பாரே. 42

பொன்னாங்கண்ணி தைலம்

உண்ணியேயின்னமொரு செய்திகேளு
உள்ளுக்குத்தைலமொடு கிலுத்தஞ்சொல்வேன்
கன்னியாம்பொன்னாங்காணிவேர் பலந்தானென்று
கனமானவெட்டிவேர் வெலூமிச்சம்வேர்
புன்னியே 2 ஓரித்ழ்வேர் சிறுகீரைவேர்
புகழாகவகைக்குவொரு பலந்தான்சேர்த்துப்

1 நாகவல்லி - வெற்றிலை. 1 ஓரிதழ்வேர் - தாமரை.



பன்னியேபால்வார்த்து அரைத்துநெய்யிற்
படிரண்டுக்குள்ளிட்டுக் காச்சுவாயே. 43

காச்சியேயுட்கொள்ளக் கரண்டிவீதம்
கனரோகம்பதினெட்டுங் காணாதோடும்
மாச்சிதேவுட்க்ரங்கள் கண்டுபோகும்
மனுகாவுட்டிணங்கள் தாகம்மேகம்
போச்சுதேவரட்சையொடு வுஷ்ணரோகம்
புண்ணான அச்சரங்கள் போகுஞ்சொன்னேன்
எச்சுதேயென்னாதே சாதிக்காயு
மியலானவதிமதுர மாசக்காயே. 44

சதாவேரி கிருதம்

காயொன்றுவகைகளிலே பலமொன்றாகக்
கனரத்திடுவாய்காச்சமுன்னே நெய்க்குள்ளாக
தாயென்றுயின்னமொரு கிருதஞ்சொல்வேன்
1 சதாவேரிக்கிழங்கினிட சார்படிதான்
வாயென்ற 2 திரிகடுகு 3 திரிபலாதி
வகைவீதங்களஞ்சிபொன்று நெய்யோதாழி
யேயென்றுயெரியிலிட்டு மெழுகதானல்
யிறக்கியேவைத்திடுவா யியல்புதானே. 45

இபலாகக்குடித்திடுவாய் கரண்டிவீதம்
எடுத்ததொருகரப்பனெல்லா மிரங்கிப்போகும்
முயல்வான நீர்தோஷ முழுதும்போகும்
முழங்குகின்றவாயுவுட னிரைச்சல்தீரும்
செயலானபித்தமொடு சிலேற்பனங்கள்
சளியிருமல்கிறுகிறுப்பு செரியாமாந்தம்
மயலானகிறுகிறுப்பு மற்றும்போகும்
மடவார்களின்னமொரு கிருதங்கேளே. 46

1 சதாவேரி நீர்விட்டான் - அல்லது தண்ணீர் விட்டான்.
2 திரிகடுகு - சுக்கு, திப்பிலி, மிளகு.
3 திரிபலாதி - தான்றி, நெல்லி, கடுக்காய்.



A siddhadreams ebook

### திரிகடுகு திரிபலாதி எண்ணெய்

கிருதமாந்திரிகடுகு திரிபலாதி
 கேளப்பாவகைக்குவொரு பலந்தான்வாங்கி
நருதமாஞ்சலம்பத்துப் படியினுள்ளே
 நன்றாகஇடித்துவற்றி யெட்டொன்றாக்கி
விருதமாய்ப்போகாமல் மெழுகதாக
 வியனுகவடித்ததனை வைத்துக்கொண்டு
சிறகவேகரண்டி நிறை கொள்ளும்போது
 திருகின்றவியாதிதனை செப்பக்கேளே.

செப்புகின்றசிரகமும் ஓமங்கூட்டிச்
 சிராகச்சூரணித்து வைத்துக்கொண்டு
இப்புவியில் 1 வெருகடிதானெய்யிற்கொள்ள
 ஈரெட்டுக்கரப்பனொடு சிலந்திகுட்டம்
நப்புகிறேன்கிராணியொடு அசிரணங்கள்
 நாடோறுநாடாது புவியுளோர்க்கு
மெய்ப்படவேயெத்தனது தாய்சொல்லாலே
 இன்னமொருகிருதவகை யியம்பக்கேளே.

### தூதுவளை கிருதம்

இயம்பக்கேள் தூதுவளை பலந்தான்பத்து
 இயல்கண்டங்கத்திரியும் பலந்தான்பத்து
நயவான துளசியது பலந்தான்பத்து
 சாதகமாய்த் 2 தோடையிலை பலந்தான்பத்து
நயம்பெறவேவிஷ்ணுகிராந்தி பலந்தான்பத்து
 நன்றாகப் 3 பிரமியாது பலந்தான்பத்து
செயமாகயிதையிடித்துத் தூணிநீரிற்
 சேரவேகாய்ச்சியதை யிறுத்துவாங்கே. 49

இருத்திடவே 4 யெண்ணெயொடு 5 நெய்யுங்கேளு
 யிதமான திப்பிலி சித்திரத்தைரண்டும்

1 வெருகடி - பூனையடி. 2 தோடையிலை - ஆடாதோடை.
3 பிரமியாது-பிரமமூலி. 4 எண்ணெய்-நல்லெண்ணெய். 5 நெய்-பசுவிநெய்.



வருத்திடவேவகைக்கு அரைபலமதாக
 வடிமெழுகுபதமரைத்துச் சலத்திற்கிண்டி
முறித்திடவேபோகாமல் வடித்துக்கொண்டு
 முக்கியமாங்கரண்டி நிறை யெடுத்துக்கொள்ளு
உருத்திடவேகொண்டாக்காற் தீராதேநாயும்
 உற்றதொருபிருமலெல்லா மோடிப்போகும். 50

ஓடிப்போந்தேன்கூட்டிக் கொண்டாயானல்
 உறுசயங்களிளைப்பீளை தூர்ப்புகக்கல்
ஓடிப்போம்வாய்வோடு கெட்டெல்லாமே
 ஒவ்வாமலோடிப்போம் தனினமாகும்
தேடிப்போந்திரிகடுநெற் பொரியுங்கூட்டித்
 தேனிலேகொண்டுவிடு கிருதஞ்சேர்த்து
தேடிப்போங்கொண்டிடவே சொன்னநோய்கள்
 க்ஷேமமாமென்றருளச் செய்குவீரே. 51

### ஜன்னிக்கு வசம்புத்தைலம்

செய்தபடிசன்னிக்குத்தயிலங்கேளு
 செப்புகிறேன்வசம்புடனே 1 வெள்ளுள்ளித்தா
உய்தமுள்ள 2 நிலவேரு 3 முசுறுமுட்டை [ன்
 வுற்பனமாந் 4 தண்டுடனே கோழிமுட்டை
நெய்தாழிவேப்பெண்ணெய் கூடக்கூட்டி
 நிறையாகவகைக்குவொரு பலமாய்ச்சேரு
செய்கின்ற ஆமணக்கி னெண்ணெய்தாழி
 சிறப்பாகவிட்டதிலே சேர்த்துக்கொண்டு. 52

கொண்டுவிடவெண்ணெய்க்குக் கிஷாயங்கேளு
 கூறாகச்சுக்கிடித்துக் கிளிபோற்கட்டிக்
கிண்டிவிடுஞ்சுடவைத்துப் பின்புமைத்தா
 கிரமமாய்க்குடித்திடவே சன்னிவாதஞ்

1 வெள்ளுள்ளி - வெள்ளைப்பூண்டு.
2 நிலவேர் - சாக்குப்பூச்சி.
3 முசுறு - எறும்பு. 4 தண்டு - மூக்கில்.

A siddhadreams ebook

சிண்டுசெய்யும்வலியஞ்சுஞ் சிதறிப்போகுந்
தீராதபிணிகளுக்கு வுள்ளேகொள்ள 5
இன்னுவிடநாளைக்குத் திருமென்றே
யெளிதாகவித்தயில மியம்பினேமே.

எருக்கிலைக் குழம்பு

இயம்பிடவேவகையொன்று சொல்லக்கேளு
யெருக்கிலைபாலுழக்கு கள்ளிப்பாலுழக்கு
சுயமான நவாச்சாரம் 1 கழஞ்சுபத்து
சுபமாகவிட்டரைத்து மெழுகதாக்கி
நயம்பெறவேஆமணக்க ணெண்ணெய்சேர்த்து
நலமான 2 செம்பதிலே வைத்துக்கொண்டு 60
செயமானபெருவயிறு மகோதரங்கள்
திறமான நீராம்பல் பாகமென்றே.

பாகமாய்மிகக் கிளறியானபின்பு
பகருகின்ற சுண்டைக்காய்விதற்கொள்ள
வேகமாத்தின்றவுடன் பெத்தந்தானும்
விட்டுவிடவேணுமென்றால் வெந்நீர்கொ
நாகமாம்விஷம்போன்ற விஷநீரெல்லாம்
நாடாதுபேதித்து வாங்கிப்போகும் 1
ஏகமாமருந்துதீ கொண்டாயானால்
யேழுநாட்பாற்கொள்ள விதமுந்தானே.

குப்பமேனிச் சூரணம்

தானென்றமேனிச் சூரணமேசெப்பு
தான்கரியசீரகமுஞ் சூரணித்து
நானென்றநாற்பதுநாள் கொள்வீராகில்
நாடாதவாய்வோடு தத்தமெலாந்
தீனென்ற 3 தீபனங்கள் நன்றாய்வாங்கும்
கெஷணத்திலெமத்தமெல்லாஞ் சிதறண்டேபோ

1 கழஞ்சு - ஒன்றேகால் விராகனிடை, அல்லது 40 குன்மெணியிடை.
2 செம்பு - செப்புபானை. 3 தீபனம் - பசியெடுத்தல்.



போவென்ற 1 சிலேவிஷங்க ளெல்லாந்திரும்
புதுமைசேரக்கினியின் பொடிவிதாமே. 56

சீரகப்பொடி விருத்தம்

பொடியானபொடியொன்று சொல்லக்கேளு
புகழானசீரகமும் பலந்தானொன்று
செடியானவொரு 2 சன்னப்பொடி பலந்தான்
சிறந்தசர்க்கரையிவையோ டொன்றாய்ச்சேர்த்து
வடிவாகவேவடித்து வைத்துக்கொண்டு
வளமான 3 நறுநெய்யிற் குழைத்துக்கொள்ள
அடியானவுஷ்ணத்தோ டுள்ளிநோய்கள்
சுருக்கான நீர்கடுப்பு பிரமேகங்கள். 57

கெமுடனுள்க்காய்ச்ச லெரிவுகாந்தல்
4 வியனுகவெரித்த குன்மமெல்லாந்திரும்
போகமுறுமெலும்புருக்கிப் போதுத்துப்போம்
பொருக்காதநீர்த்தாகம் புண்ணுநெஞ்சில்
வேகமுறும்வாய்நாற்ற மேல்நாற்றங்கள்
விட்டோடிவிடுவதற்கு விருத்துபோடு
கடைநீக்குஞ்சீரகஞ் சாதிக்காயுங்
கூட்டியேஅவின்குரு சாணியோடு. 58

குருசாணிப் பொடி

குருசாணிவகையொன்று பலமொன்றாகக்
கூட்டியேசரிநிறையாய் வாங்கியேதான்
திருசாணியாகவே வறுத்துக்கொண்டு
நேராக 5 வேம்பின்சூரணமுஞ்சேர்த்து
உரோசாணிவாலைப்பு அவியவிட்டு
உருகவேபிணிநாசந் தன்னிற்கொள்ள

1 சிலேவிஷம் - ஆராமல் சில நீரொழுகும் புண்கள்.
2 சன்னப் பொடி - சூரணம். 3 நறுநெய் - பசுநெய்.
4 வியனுக - வெப்பமாக. 5 வேம்பு - கருவேம்பு.

DOCUMENTATION CENTRE
1-9-…
S 614

முருசாணியானதொரு கடுப்புளைச்சல்
மூலந்திற்கிராணியொடு முழங்கும்வாய்வு. 59

## கொடுவேலிச் சூரணம்

முழங்கவேவகையொன்று சொல்லக்கேளு
மூதண்டைக் 1 கொடுவேலி சூரணித்து
விளங்கவேபடியொன்று 2 சீனப்பாவும்
விதமாகப்படியொன்று கூடக்கூட்டி
களங்கக்கார்கோலரிசி படியுமொன்று
கருஞ்சீரகத்துட னற்சீரகமுங்கூட்டி
புளங்கவேவகையொன்று பலமொன்றாகப்
புனிதமாய்ச்சூரணித்துப் புகழ்ந்துவைவே. 60

வைத்திட்டசூரணந்தான் றேனிற்கொள்ள
வருஞ்சூலைக்கிரந்தியொடு வாதவாய்வும்
வெற்றிட்டவண்டுகடி 3 வெளுப்புவெட்டை
விஷகடியுமேல்கரப்பன் விரைந்துபோகும்
பற்றிட்டமேகவகை பறந்துபோகும்
பான்மையுட னுடம்பெல்லாம் பாருபாரு
வைத்திட்டமாகவே சொல்லிவைத்தேன்
கனமானமிளகுநீர் கஷாயங்கொள்ளே. 61

## கெர்ப்பமில்லாதவர்களுக்குக் கெர்ப்பமுண்டாகுதல்

கொள்ளவேமண்டலத்தில் நிமைதோய்கள்
குணமாகுமின்னமொரு வகையைக்கேளு
பிள்ளையில்லாதவளுக்கு மருந்துசொல்வேன்
பேயக்கொம்மட்டிவித்து நேர்வாளந்தான்
உள்ளபடிசமனாய்க் குளித்தைலம்வாங்கி
யுமமஞ்சட்பொடியதனிற் சேர்த்துக்கொண்டு
கள்ளமின்றிமத்தித்துக் கொண்டுட்கொண்டால்
கன்னியவளம்மாதங் கெர்ப்பமாவாள. 62

1 கொடுவேலி - சித்தாமூலம்,
2 பாவு - போல. 3 வெளுப்பு - பாண் அல்லது சோகை



கெர்ப்பமதுமாவதற்கு மருந்தும்வேறே
இலேசிக்கவேண்டாங்கா ணையுந்நீரும்
செப்பமுடன்மருந்துகொண்டால் வெந்நீர்கொள்ளு
தெளிவாகப்பேதிக்குங் கஞ்சிகொள்ளும்
உற்பமாய்மூன்றுநாட் குளித்தநாட்தொட்
டுறுதியாய்க்கொண்டுவிடு வொருபோதுண்ணு
அற்பமென்று நினையாதே யுறுதிப்பாரு
மறைவிட்டுபின்னமொரு மடைவுகேளே. 63

## கிராணிப் பேதிக்கு லேகியம்

அடைவானகொம்பாக்குந்தரிக்க
மானகுருசாணியபின் சாதிக்காயுந்
திடமாகச்சூரணித்து நல்லெண்ணெய்க்குள்
திரட்டியேகொண்டுவிடு சிறுபுன்னைக்காய்
குடலோடேபற்றுகின்ற வயிற்றளைவுங்
குத்துகின்றகுறுக்குவலி மூலச்சூடு
கடல்போலேவந்ததொரு கடுப்புந்தீரும்
கண்டிமூள்ளபுண்ணாருங் கண்டவாரே. 64

## காதுக்கு எண்ணெய்

கண்டபடிசெய்யிலொன்றி சொல்லக்கேளும்
காதுக்குயெண்ணெயொன்று கட்டுதற்கு
விண்டபடி 1 மூகநமுட்டை 2 பூநாகந்தான்
வெற்றியுள்ள நண்டிறச்சி வெள்ளையுள்ளி
கொண்டபடிகோழிமுட்டை வசம்பு 3 குக்கில்
குணமாகவகைக்குவகை கழஞ்சுகூட்டிப்
பண்டருளும்வேப்பெண்ணெய் தன்னிற்சேர்த்துப்
பதமாகக்காச்சியதைக் காதிற்சேர்த்து. 65

பாச்சியேயடைத்திடுவாய் பத்துநாளில்
பனிச்சென்றுசெவிகேழ்க்குஞ் சீழ்ப்பாச்சர்போம்

1 மூகநமுட்டை - எதம்புமுட்டை. 2 பூநாகம் - காக்குப்பூச்சி,
3 குக்கில் - குங்கிலியம்.

A siddhadreams ebook

மாச்சுதேருத் துளைச்சற் பூச்சிச்சாகும்
மடைப்புவிடுங்காதிரைச்ச லதுவுந்தீரும்
வாச்சுதேயின்னமொரு வரிசைகேளு
வாயிலுள்ளவியாதியெல்லா மகன்றுபோக
பாச்சையாபாகத்தில்முன் தைலமஞ்சிப்
பச்சையாய்த்தின்றெ துக்கப்பற்குத்துப்போம். 66

பல் குத்துக்கு

குத்துவிடுமுட்பிரண்டை வேர்கியாழும்
கொப்பிளிக்கப்பல்லரணைத் தத்தருலே
அத்துப்போமசைந்தபல்லு முறத்துநிற்கு
மழுக்கெல்லாந்தீர்ந்துவிடு மின்னங்கேளு
செத்துப்போம்தாக்கில்வருஞ் சிங்கிரோகந்
தீரவொருமருந்துசொல்வேன் சிவவேம்பின்வே
முத்துப்போல்பல்விளக்கும் பத்துநாளில்
முறையானமேகமெல்லா முழுதும்போமே. 67

முழுதுமேபோகவொரு மருந்துசொல்வேன்
மூதண்டவெள்வேருங் 1 குமிழ்தான் 2 வன்னி
பழுதில்லாமருந்துடனே குண்டலமாம் 3 பாலை
பழுத்தயெருக்கிலையுடனே பலாசகாரை
தொழுதுநீபட்டையது சமனாய்த்தாக்கித்
தூணிநீர்தனிற்போட்டு யெட்டொன்றாக்கிப்
பழுதுவராமற்காச்சி வடித்துக்கொண்டு
பாங்கானசம்பிரச் சாறுநாழி. 68

நாழியுடனெள்ளெண்ணெய் நாழிவிட்டு
நலமான துருசு வெள்ளைகுத்திரிக்கம்
வேழியுடன்வகைநாழி கழஞ்சுவீதம்
விதமாகப்பொடித்திட்டு வடித்துக்கொண்டு
கோழியிடரத்தம்விட்டுக் கொப்பளிப்பாய்
குவடுகளிற்கட்டுமுதற் குலைந்தபல்லும்

1 குமிழ் - சிலைக்குமிழ். 2 வன்னி - கொடிவேலி.
3 பாலை - வெட்பாலை.



வாருவெனவீக்கமுதற் பிணிகளெல்லாம்
வாங்கிப்போம்வளமான வரிசைபாரே. 69

பார்ப்பதற்குஇன்னமொரு வரிசைகேளு
1 பாகலிலைச்சாறுடன் 2 கொம்மட்டிக்காய்ச்சாறு
ஏற்பதற்குவேம்பினிட இலையின்சாறு
பெருக்கிலைச்சாற்விளிப்பாலைச் சாற்வகைக்குநாழி
சேர்ப்பதற்குவேம்பெண்ணெ யாமணக்கினெண்ணெ[ய்
திரளவேமெழுகுபதஞ் சேரவாங்கி
நாக்குடனேகாசிடையாய்க் கொண்டபேர்க்குச்
சலக்கட்டும்வலக்கட்டுங் கிருமியோடே. 70

கிருமியென்றகிருமியெல்லாங் கண்டுபோகுங்
கெர்ப்பத்தின்கிருமியெல்லாங் கெதிகெட்டோடும்
வருமியென்றவாய்வெல்லா மண்ணாய்ப்போகும்
வாதமொடுமலக்கட்டுத் திரண்டவாய்வும்
ஒருமித்தநோய்களல்லா மோடிப்போகும்
உலகத்தில்வெகுசுருக்கு விரைத்துப்பாரும்
கருமியென்றவகையெல்லாஞ் சொல்லிவிட்டேன்
கஷாயத்தின்விதங்களையுங் காட்டுறேனே. 71

குறுந்தொட்டிவேர்க் கிஷாயம்

காட்டுறேன் 3 குறுந்தொட்டி வேர்க்கிஷாயத்தா
காயேலஞ்சீரகமுங் காலாய்க்கூட்டி
ஓட்டுகின்றஇருநாழி நீரில்விட்டு
உழக்காகக்காய்ச்சியே யிருபோதுண்ண
மூட்டாமல்மூன்று நாட்கொண்டாயானால்
உட்சுரமும்மூல வாய்வனைத்துமட்டோ
மீட்டுவிடுப்பித்தமெல்லாம்வாந்திதீரும்
விளம்புகிறேன்தின்ன மொருவிதங்கள்பாரே. 72

1 பாகலிலை - பலாவிலை.
2 கொம்மட்டி - புளிமாதுளை.
3 குறுந்தொட்டி - சிறுகாஞ்சொறி.

A siddhadreams ebook

### வெட்பாலைக் கியாழம்

விதமென்னவெட்பாலை சேகரமுங்கூட்டி
வீராகவகைக்குக் கால்பலமதாக
இதமுடனேயிருநாழி நீரில்விட்டு
எட்டொன்றாய்க்காய்ச்சியே யிறுத்துக்கொள்ள
பதமென்னவருசுரங்கள் பறந்துபோகும்
படுபாவிபித்தமெல்லாம் பறந்துபோகும்
மதமென்றமாய்வெல்ல மகன்றுபோகும்
வளமானஇன்னமொரு வரிசைகேளே. 7

### வில்வவேரின் கியாழம்

வரிசையுளவில்வவேர் நெற்பொரியுங்கூட்டி
வகைக்குக்கால்பலமா யிருநாழிநீரில்
உரிசையுடனெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
உடனருந்தவாத பித்தவிக்கந்தீரும்
பிரியமுடின்னமொரு கியாழம்சொல்வேன்
போனவில்வவேர் அமுக்கிலாம்வேர்
துருசானகக்குடனே வகைக்குக்காலால்
கூட்டியேயிருநாழி நீரிலிட்டு. 7

இட்டவித்துஎட்டொன்றாய் வைத்துக்காய்ச்சி
இருந்துநீகொண்டிடவேவிக்கல்வாந்தி
முட்டவருமசதியொடு ஊலைந்தாகம்
முறையானசுரந்தீரு மொழிந்தவாறே
சட்டமுடனின்னமொரு கியாழங்கேளு
கருவானமுத்தமொடு விஷ்ணுகிராந்தி
இஷ்டமுடன்வகைக்குக் கால்பலமதாக
இருநாழிநீரில் விட்டொன்றாக்கே. 7

ஆக்கியேமூன்றுநா ளிருபோதுண்ண
அகண்டசயமீளை யிளைப்பதிகமூச்சு



போக்கிவிடுமதினோடு மிளகுகூட்டிப்
போட்டுவிடுகிஷாயத்தைத் தேனிற்கொள்ளு
வாக்கியமாயின்னமொரு கிஷாயஞ்சொல்வேன்
வளர்நெல்லிதான்றியுடன் கடுக்காய்மூன்று
நோக்கியேவகைக்குக் காற்பலமதாக
நுண்மையாய்மிளகதிலே கழஞ்சுகூட்டே. 76

கூட்டியேயிருநாழி நீரிலிட்டுக்
குலாவவேயெட்டொன்றாய்த் தேனுஞ்சேர்த்து
நாட்டியேதிரிகடுகுமேற் பொடியாய்த்தூவி
நலமாகவேயருந்த சிலேற்பனங்கள்
நீட்டியேபீளையுட னிசுப்புக்கக்கல்
நிறுத்துமேகங்களெல்லாம் நினைவாய்க்காணும்
ஓட்டியேவிடுவதற்கு இன்னமொன்று
உரைக்கிறேனுலகத்தோர் பிழைக்கவென்றே. 77

### சந்தனக் கியாழம்

என்றதொருசந்தனமு 1 மிலாமிச்சம்வேர்
வெட்பாலைமுத்தமொடு சுக்குங்கூட்டி
தன்றெனவேவகைக்குக் கால்பலமதாக
நயமுடனேயிருநாழி நீரிலிட்டு
பொன்றெனவேயெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
புகலுஞ்சர்க்கரையுடனே பத்துநாட்கொள்
நின்றதொருசிரவாய்வு சிரதோஷங்கள்
நிகழ்சுரத்திலுள்ள பித்தம்செட்டுவாதம். 78

### வேம்புக் கியாழம்

வாதமொடுசுரங்கள்நீர்க் கடுப்புத்தானு
மஞ்சளநுரம்பித்தகா மாலைதீரும்

4 விலாமிச்சம்வேர் - குரிவேர்.

A siddhadreams ebook

வேதமொடுஇன்னமொரு கியாழஞ்சொல்வேன்
வேப்பினதுபட்டையுடன் மிளகுசுக்கு
நாதமொடுவகைக்குக்காற் பலமதாக
நளினமுட னிருநாழி நீரில்விட்டு
போதமுட னெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
புழுக்கிருமிமந்தமதும் வாய்வெல்லாமே. 7

## இருவேலிக் கியாழம்

எல்லாந்தான் நீரவொரு கியாழஞ்சொல்வேன்
இருவேலி 1 மதுரமுட னின்சிகூட்டி
சொல்லாமல்வகைக்குக்கால் பலமதாகத்
தூக்கியேயொருநாழி நீரைவிட்டு
வெல்லவேதீயெரித்து எட்டொன்றாக்கி
விதமாகப்பத்துநாள் கொள்ளும்போது
வல்லதொருவாய்வுபோம் பித்தஞ்சாகும்
வகையுடனேபுவியிலிதை வகுத்திட்டேனே. 80

## பவுத்திரம் கண்டமாலைக்குக் கியாழம்

வகுக்கக்கேள்கண்டமாலை பவுத்திரங்கள்
வலிமையுள்ளவிப்புருதி வீக்கம்தானும்
தொகுக்கக்கேள் துடைவாழை புண்சூலைதான்
தொந்தரவுசெயும்பிளவை வீக்கத்தோடு
மிகுதிட்ட அரையாப்பு மூன்றுமெய்யாய்
வேதனைகள்செய்யாம லுடைந்துபோக
பகுக்கக்கேள தற்குரிய மருந்தைநீயும்
படியினிலேகூறுவேன் பரிந்துதானே. 81

பரிந்துடனே அமுக்கனங் கிழங்கினோடும்
பாசமுள்ளபெருங்காய மிரண்டுகொண்டு

1 மதுரம் - அதிமதுரம்.



தெரிந்திடவேகோழிமுட்டை தன்னைவாங்கி
திகழுமதின்வெள்ளாம்பல் தன்னைவிட்டு
நெரிந்திடவேசந்தனக்கல் தனிலுரைத்து
நேமமாய்மைபோலே வாரிக்கொண்டு
சொரிந்திடவே அப்புண்மேற் கனமாய்ப்பூசிச்
சொலப்போகுங்கஷாயத்தின் சூட்சங்கேளே. 82

கேளப்பாகரசனுங் கண்ணிச்சாற்றிற்
சீர்த்தியுள்ளகற்றாழை மடலைச்சீவி
வேளப்பாவுள்ளிருக்குஞ் சோற்றைத்தானும்
விதமாகவெடுத்தந்த சாற்றிற்சேர்த்து
நாளப்பாமிரவியினிற் காயவைத்து
நன்றாகபத்துபல மானபோது
ஆனப்பா 1 திரிகடுகு 2 திரிபலாதி
அதைக்கண்டுவறுத்திடித்து வதனிற்சேரே. 83

சேர்த்தித்தவகைகளெல்லா மொன்றதாக
தீயினிலேகாயவைத்து மெழுகதாக
பார்த்ததனையிறக்கிக்கொண் டுடனேகேளாய்
பகருஞ்சர்க்கரைபலந்தான் பத்துகொண்டு
சீர்த்தியுடனதிற்கலந்து எட்டொன்றாக்கி
கேளப்பாசாடியினில் வைத்துக்கொண்டு
பூர்த்தியாய்ப்புன்னைக்கா யளவதாகப் னே.
புண்ணியனே 3 மண்டலந்தா னென்றுகொள்

மண்டலத்தானொன்றுக் கிருபோதாக
மாறுமலதையருந்த மைந்தாகேளாய்

1 திரிகடுகு - மிளகு, சுக்கு, திப்பிலி.
2 திரிபலாதி - தான்றி, நெல்லி, கடுக்காய்.
3 மண்டலம் - 40-நாள்.

A siddhadreams ebook

கண்டமாலைகள்பவுத்திரம் வீக்கம்நாளும்
கூட்டியபிரேதார் துடைவாழை அரையாப்போடு
கொண்டபுண்புரைகளெல்லாம் கெதிகெட்டோடும்
குருவாகஅதையெண்ணிச் செய்திட்டாலே
அண்டிடாதெப்போது மாய்ந்துபாராய்
அன்பனே ஆயிசொல்லு மதியிதகமே. 8

மதிமிகுந்தபுவியிலுள்ள மனிதர்க்கெல்லாம்
வாய்ந்தபிணிதீர்வதற்கு வளமதாக
நிதிமிகுந்தஅவிழ்தங்கள் தயிலத்தோடு
நிச்சயமாயங்கைநெல்லி கனியைப்போலப்
பதிமிகுந்தபாடல்க ளுண்மையாகப்
பகுத்திட்டேன்பண்பாக வயித்தியர்க்குத்
துதிமிகுந்ததாகவெண்ணிச் செய்வாராகிற் [னேன்
றுலைந்தோடும்பிணிகளெல்லாஞ் சுருக்கிச்சொன்

## வைத்திய தைல முறைகள்

முற்றிற்று.

Indian Medicine
LIBRARY
Acc. No 628
Date 3-9-70

திருமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1936.

A siddhadreams ebook

கண்ணுசாமியம் என்னும்

வைத்தியசேகரம் விலை ரூ. 3-5

வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள் தமது பெயர் உலகில் எக்காலத்திலும் நிலைபெறுமாறு பரம ரகசியமாக தான் கையாண்டு வந்த பல அரிய பெரிய பாகங்களை யெல்லாம் சூரணம், மாத்திரை, லேகியம், எண்ணெய், தைலம், கிருதம், பற்பம், செந்தூரம், ஆக்கிராணம் முதலியவைகளை ஆங்காங்கு கைபாகம் செய்பாகம் முதலிய வற்றால் எளிதில் உணரும்படி இப் புத்தகத்தில் எழுதியுள்ளார்.

வைத்திய சிந்தாமணி விலை ரூ. 4-00

[வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றியது]

இந்த "வைத்தியசிந்தாமணி" என்னும் நூலானது யூகிமா முனிஎன்பவரால் கூறப்பட்டது. இதனிற்ரோகநிதானங்களை செவ்வனே கூறியிருப்பதினால் இதனை ஆதாரமாகக்கொண்டும் சில கிரந்தங்களினின்றும் சிலது சேர்க்கப்பட்டும் ஒவ்வொரு ரோகங்களின் இறுதியில் ஆங்கிலேய மருத்துவத்தில் கூறப் பட்டுள்ள ரோக நிதான விஷயங்களை யதார்த்தமாகவும், அமைத்துக் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு பல அரிய சிகிச்சைகளையும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

சுகந்த பரிமள சாஸ்திரம் விலை ரூ. 1-00

இதில் சுகந்த மூக்குத்தூள், ஸ்நானப் பொடிகள், பல் பொடிகள் புதுக்கோட்டை மைசூர் முதலிய சமஸ்தான அத்தர் பில்லைகள், ஊதுவர்த்திகள், பரிமளத் தைலங்கள், கர்ப்பூரம், கர்ப்பூரத் தைலம், சந்தனாதித் தைலம் முதலிய இன்னும் பல அருமையான பரிமளத் திரவியங்கள் செய்யும் முறைகள் அடங்கியிருக்கின்றன.

கிடைக்குமிடம்:— B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு, சென்னை—1.

A siddhadreams ebook